# இன்றைய தேவை (Today's Need)

## (அன்றாடத் தேவை- Daily Need)

Pr. K.Joseph

நம்முடைய வாழ்வில் அனுதினமும் நமக்குத் தேவையான முக்கிய காரியங்கள் பல உள்ளன. குறிப்பாக தண்ணீர், உணவு, ஓய்வு போன்றவைகள் தினமும் நமக்கு மிகவும் தேவையானவைகளாக இருக்கின்றன என்பதை நாம் அனைவரும் அறிந்திருக்கிறோம். இவைகள் இயற்கையானவைகள். இயற்கையானவைகளோடு தெய்வீகமான ஆவிக்குரியவைகளின் அன்றாட தேவைகளைக் குறித்து, இந்தநாளில் தேவன் நமக்கு முக்கியப்படுத்திக் காட்டிட விரும்புகிறார்.

கடந்த காலத்திற்குரியவைகளை வைத்துக்கொண்டோ அல்லது நாளை பார்த்துக்கொள்வோம் என்றோ நாம் வாழ்வதை தேவன் விரும்பவில்லை. ‘‘கடந்ததை நினைத்து கலங்காதே’’ என்றும் ‘‘நாளைய தினத்தைக் குறித்துக் கவலைப்படாதே’’ என்றும் தேவன் சொல்கிறார்.
லூக்கா–11: 2 *எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை அன்றன்றும் எங்களுக்குத் தாரும்* என்று ஜெபிக்குமாறு இயேசு கற்றுக்கொடுத்திருக்கிறார். நம்முடைய தேவனும் கடந்த காலத்தின் தேவனாகவோ அல்லது வருங்காலத்தின் தேவனாகவோ இராமல் ‘‘இருக்கிறவராகவே இருக்கிறேன்’’ என்று சொல்கிறார்.

இன்று போய் நளை வா! இன்று ரொக்கம் நாளை கடன்! என்பது போன்ற வார்த்தைகளை நாம் கேட்டிருக்கிறோம். நமக்கு இன்றைய தேவைகளாக இருப்பவைகள் எவைகள் என்பதை நாம் பார்க்கலாம்.

### 1. தேவனைச் சார்ந்து வாழ்தல்:

சங்–91: 1, 2 *உன்னதமானவரின் மறைவிலிருக்கிறவன் சர்வவல்லவருடைய நிழலில் தங்குவான். நான் கர்த்தரை நோக்கி: நீர் என் அடைக்கலம், என் கோட்டை, என் தேவன், நான் நம்பியிருக்கிறவர் என்று சொல்லுவேன்.*

- தேவனை நேசித்தல்
- தேவனை நம்பி வாழ்தல்
- தேவனுடைய முகத்தைத் தேடுதல்
- உதவிக்காக அவரை நோக்கிப்பார்த்தல்
- அவரோடு நேரம் செலவழித்தல்
- ஜெபித்தல், தேவசப்தம் கேட்டு நடத்தல் (எபி–4: 7)
- வேதத்தை தியானித்தல்

நீதி–3: 5 *உன் சுயபுத்தியின்மேல் சாயாமல், உன் முழு இருதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கையாயிருந்து,*

### 2. பிசாசுக்கு எதிர்த்து நிற்றல்:

யாக்–4: 7 *பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அப்பொழுது அவன் உங்களைவிட்டு ஓடிப்போவான்.*

நம்மை சோதித்திடவும், தாக்கிடவும், வஞ்சித்திடவும், நமக்குரிய நன்மைகளைத் திருடுவதற்கும், தேவனைவிட்டு நம்மைப் பிரிப்பதற்கும், அழிப்பதற்கும் அவன் சுற்றித்திரிகிறான், வகைதேடி அழைகிறான். 1பேதுரு–5: 8 *தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள், ஏனெனில், உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான்.*

- இயேசுவின் நாமத்தில் பிசாசுக்குக் கட்டளையிடுதல் (லூக்-9: 1)
- இயேசுவின் நாமத்தில் அசுத்த ஆவிகளைத் துரத்துதல் (மாற்16: 17)
- இயேசுவின் நாமத்தில் பலவானைக் கட்டுதல் (மத்-12: 29)
- இயேசுவின் நாமத்தில் இருளின் ராஜ்யத்தின் மீது ஜெயமெடுத்தல்
- பிசாசின் தந்திரங்களை அறிந்து செயல்படுதல் (2கொரி-2: 11, எபே-6: 11)
- பிசாசின் கிரியைகளை அழித்தல் (1யோவா-3: 8)
- ஆவிக்குரிய யுத்தம் செய்தல் (எபே-6: 12)

**3. பிறரை மதித்து வாழ்தல்:**

*மத்-22: 39 உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக.*

பிறரைக் குறித்த கரிசனையும் பாரமும் நமக்குள் எப்பொழுதும் இருக்க வேண்டும். பிறர் என்றால் அது யாரைக் குறிக்கிறது? ‘நான்’ அல்லாத மற்ற அனைவரும் நமக்குப் பிறராக இருக்கிறார்கள். நமக்குத் தெரிந்தவர்கள், நமக்குப் பிடித்தவர்கள், நம்முடைய சொந்த பந்தங்கள் மாத்திரமல்ல. தேவையிலிருப்பவர்கள், நமக்கு விரோதமாகச் செயல்படுபவர்கள், நம்மை அறியாதவர்கள், நமக்குத் தெரியாதவர்கள், மற்றவர்களால் ஒதுக்கப்படுபவர்கள் போன்ற அனைவருமே நமக்குப் பிறராக இருக்கிறார்கள்.

- பிறருக்கு உதவுதல்
- பிறரை நேசித்தல்
- பிறருக்காக ஜெபித்தல்
- பிறருக்கு சுவிசேஷத்தை அறிவித்தல்
- பிறரைப் புண்படுத்தாதிருத்தல்
- பிறரை உற்சாகப்படுத்துதல்
- பிறருடைய இன்ப துன்பத்தில் பங்கெடுத்தல்

# தேவன். சாத்தான், மனிதன்

Pr. K.Joseph

1. **தேவன் சாத்தானுக்கு விரோதமாக மனிதனிடம் சொல்வது:**
   பயப்படாதே (2தீமோ-1: 7)
   வஞ்சகத்திற்கு உள்ளாகாதே
   இடம் கொடுக்காதே (எபே-4: 27)
   எதிர்த்து நில் (யாக்-4: 7)
   ஜெயமெடு (வெளி-12: 11)

   **தேவன் மனிதனுக்கு சார்பாக சாத்தானிடம் செயல்படுவது:**
   அனுமதியின் கீழ் (யோபு) தொடவைக்கிறார்
   புடமிடுவதற்குப் பயன்படுத்துகிறார் (பேதுரு)

   **தேவன் மனிதனுக்கு சார்பாக மனிதனிடம் எதிர்பார்ப்பது:**
   தன்னைப் பிறரைப் போல பிறரையும் நேசிக்க வேண்டும்
   பிறருக்காக ஜெபிக்க வேண்டும்
   தேவையிலிருப்போருக்கு உதவி செய்யவேண்டும்
   பட்சபாதம் காட்டக்கூடாது

2. **சாத்தான் தேவனுக்கு விரோதமாக மனிதனிடம் செய்வது:**
   கீழ்படியாமலிருக்கச் செய்கிறான்
   பாவம் செய்யத்தூண்டுகிறான்
   விலகிப்போகச் செய்கிறான்
   இருதயத்தை கடினப்படுத்துகிறான்
   சிந்தையைச் சிதறடிக்கிறான், கறைபடுத்துகிறான்

   **சாத்தான் மனிதனுக்கு விரோதமாக தேவனிடம் சொல்வது:**
   குற்றம்சாட்டுகிறான் (வெளி-12: 10)

   **சாத்தான் மனிதனுக்கு விரோதமாக மனிதனிடம் செய்வது:**
   பிரிவினைகளை உருவாக்குவது
   இரக்கமின்றி நடக்கச் செய்வது
   வெறிச்செயல்களை உருவாக்குவது
   ஏமாற்றுதல், கெடுத்தல், தீயபழக்கங்களுக்குள் இழுத்துச் செல்லுதல்

3. **மனிதன் சாத்தானுக்கு விரோதமாக தேவனிடம் செய்யவேண்டியது:**
   நெருங்கி வரவேண்டும்
   உறவாட வேண்டும்
   உதவியை நாட வேண்டும்
   ஆராதித்து அவரையே உயர்த்த வேண்டும்

   **மனிதன் தேவனுக்குச் சார்பாக சாத்தானிடம் செய்ய வேண்டியது:**
   யுத்தம் செய்து ஜெயமெடுக்க வேண்டும்
   ஜெபித்து அவனைச் செயலிழக்கப்பண்ண வேண்டும்
   அவனுடைய கிரியைகளை அழித்திட வேண்டும்
   அவனது கட்டுக்களிலிருப்போரை விடுவித்திட வேண்டும்

**மனிதன் தேவனுக்குச் சார்பாகவும் சாத்தானுக்கு விரோதமாகவும் மனிதனிடம் செய்யவேண்டியது:**
தேவனிடம் வழிநடத்துதல்
இரட்சிக்கப்படாதவர்களை இரட்சிப்பிற்குள் நடத்ததுதல்
சத்தியத்தைக் கற்றுக்கொடுத்தல்
சாட்சியாக வாழ்ந்து முன்மாதிரி காட்டுதல்

**குறிப்பு:** தேவனைப் பிரியப்படுத்திட சாத்தானுக்குப் பிடிக்காதவைகளையும், சாத்தானை எதிர்த்திட தேவனுக்குப் பிடித்தவைகளையும் அறிந்து அவைகளைச் செய்யுங்கள்.

kjosephlj@gmail.com